வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
முன்னிலை: திருமதி. ப. பிரியதர்ஷினி M.Sc., M.Ed.
மூ.மு.எண்.4017/அ1/2016 நாள். 12.08.2016

பொருள்: கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு தொகுதி IV இளநிலை உதவியாளர் – நேரடி நியமனம் வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கல்வி மாவட்டத்தில் வீரிசெட்டிப்பள்ளி அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வந்த (தற்போது கடலூர் மாவட்டம், மங்கலம்பேட்டை அரசினர் மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் செல்வி.வீ.உமாமகேஸ்வரி என்பார்க்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை முடித்து ஆணை வழங்குதல் சார்பு.

பார்வை:
1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.45090/அ4/இ1/14 நாள்.25.07.14 மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணை குழு துணைச் செயலர் அவர்களின் கடித எண்4407/PSD-D/2014, நாள்.30.05.14
2. இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.4414/அ1/14 நாள்.30.07.14
3. கடலூர் மாவட்டம் மங்கலம்பேட்டை அரசினர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.182/2016, நாள்.05.08.16
4. அரசாணை எண்.241/நிதி (ஊதியக்குழு)துறை நாள்.22.07.13

------------

பார்வை(1)ல் காணும் சென்னை.6 தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைக் கடிதத்தின் படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி IV பணிகளுக்கான தேர்வில் (2013–2014) தேர்வு செய்யப்பட்டு நேரடி நியமனம் மூலம் இளநிலை உதவியாளராக கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ் காணும் இளநிலை உதவியாளருக்கு அவரின் பெயருக்கு எதிரே குறிப்பிட்ட நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தி இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் மற்றும் பணிபுரியும் இடம் (திருவாளர்கள்) | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | ஊதியமில்லா விடுப்பு | ஓராண்டு முடித்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யும் நாள் |
|---|---|---|---|---|---|
| 01. | வீ,உமாமகேஸ்வரி இளநிலை உதவியாளர், அரசுயர் பள்ளி, வீரிசெட்டிப்பள்ளி (தற்போது கடலூர் மாவட்டம் மங்கலம்பேட்டை அரசினர் மேனிலைப்பள்ளி) | 30.07.2014 முற்பகல் | இல்லை | 29.07.2015 பிற்பகல் | 30.07.2014 முற்பகல் |

இது குறித்த தக்க பதிவுகளை சார்ந்த பணியாளர் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறு சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கலாகிறது.

மேலும் சம்மந்தப்பட்ட பணியாளர் பவானிசாகர் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி முடித்து தகுதிகாண் பருவம் முடித்ததற்கான ஆணைகள் வழங்கப்பட்ட பின்னரே இரண்டாம் மற்றும் அடுத்த ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்பட வேண்டும்.

பார்வை 4ல் காணும் அரசு ஆணையின்படி சார்ந்த பணியாளருக்கு திருத்திய ஊதிய நிர்ணயம் செய்ய தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கலாகிறது.

மாவட்டக் கல்வி அலுவலர்
திருப்பத்தூர் (வே.மா.)

பெறுநர்
தலைமை ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி, மங்கலம்பேட்டை
(கடலூர் மாவட்டம்)

நகல்
சார்ந்த பணியாளருக்கு (தலைமை ஆசிரியர் மூலமாக)

Scanned by CamScanner